# மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை

## விஞ்ஞானம்

**தரம்-7**

**அலகு- 07 சக்திவடிவங்களும் பயன்பாடுகளும்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக?**

1. சக்தி என்றால் என்ன?

   வேலை செய்யும் ஆற்றல்

2. சக்தியை அளவிடும் சர்வதேச அலகு யாது?

   யூல் ( J )
3. சக்தியின் வடிவங்களுக்கு உதாரணம் தருக?

   இயக்கசக்தி, அழுத்தசக்த, மின்சக்தி ,ஒலிசக்தி வெப்பசக்தி…
   …
4. இயக்கசக்தி என்றால் என்ன? உதாரணம் தருக?
   இயங்கும் பொருள் கொண்டுள்ள சக்தி
   ஓடும் நீர் , மரத்தில் இருந்து விழுகின்ற மாங்காய்

5. சக்தி நிலைமாற்றம் என்றால் என்ன?
   சக்தியின் ஒருவடிவம் வேறொரு சக்தி வடிவமாக மாற்றப்படல் சக்தி நிலைமாற்றம் எனப்படும்

6. பின்வரும் சந்தர்ப்பங்களில் நிகழும் சக்தி நிலை மாற்றங்களைத்தருக?
   1. மின்குமிழ் ஒளிர்தல் - மின் சக்தி → ஒளிச்சக்தி

   2. தைனமோவில் இருந்து மின் பிறப்பிக்கப்படல் -இயக்கசக்தி → மின்சக்தி
7. 1. அழுத்த சக்தி என்றால் என்ன?
   அமைவில் ஏற்படும் மாற்றம் காரணமாக பொருள் ஒன்றில் சேமிக்கப்பட்டுள்ள சக்தி

8. அழுத்த சக்தி காணப்படும் சந்தர்ப்பங்கள் தருக?
   1. மரத்தில் உள்ள மாங்காய்
   2. தேங்கியுள்ள நீர்
9. பொறிமுறை சக்தியின் இருவகைகளையும் தருக?
   இயக்கசக்தி ,அழுத்தசக்தி

10.மின்சக்தியின் பயன்பாடுகள் மூன்று தருக?